புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# ஹிமானா சையத்தின் கோடுகள் கோலங்கள் புதினத்தில் கல்வி

அ.அஸ்கர்,
உதவிப் பேராசிரியர் மற்றும்
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
இசுலாமியாக் கல்லூரி (தன்னாட்சி),
வாணியம்பாடி – 635752.

## முன்னுரை

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட இசுலாமியத் தமிழர்கள் தாய் மொழியான தமிழ் மொழி மீது கொண்டுள்ள ஆர்வமும், தமிழ் மொழியிலுள்ள ஆழ்ந்த புலமையும், மொழி ஆளுமையும் வியக்க வைக்கின்றது. மொழிக்கும் சமயத்திற்கும் உள்ள உறவு ஒரு மொழியில் அந்த சமயத்தைச் சார்ந்த இலக்கியங்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைகின்றன. இசுலாம் சமயம் பன்னெடுங்காலமாகத் தமிழகத்துடன் கொண்டிருந்த தொன்மையான உறவின் காரணமாக ஆயிரக்கணக்கான இசுலாமியத் தமிழ் இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இசுலாமியத் தமிழ்ப் புலவர்கள் தமிழ் இலக்கியத்தின் மரபுகளையும் பண்பாட்டையும் மாற்றாமல் இசுலாமிய அடிப்படைச் சமயக் கருத்துக்களையும் நெறிமுறைகளையும் எடுத்துரைக்கும் வகையில் இலக்கியங்களைப் படைத்துள்ளனர்.

இசுலாமியத் தமிழ் எழுத்தாளர்களில் தனக்கென ஒரு தனி பாணியைப் பின்பற்றிச் சிறுகதை, புதினம், கவிதை, கட்டுரை, மருத்துவ நூல்கள் எழுதுவதில் சிறந்தவராகத் திகழ்ந்தவர் ஹிமானா சையத். இந்நூற்றாண்டின் மிகச்சிறந்த இசுலாமியத் தமிழ் எழுத்தாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர். எளிமையான நடையில் மிகச் சிறந்த கருத்துக்களை வெளிப்படுத்துவதில் வல்லவர். இவரின் படைப்புகளில் இசுலாமியக் கருத்துக்கள், வாழ்வியல் நெறிகள், கொள்கைகள், கோட்பாடுகள், பண்பாடு, மக்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் சமூக நிலைகளை மிக அழகாக வெளிப்படுத்தியுள்ளார்.

ஹிமானா சையத் அவர்களால் 33 அத்தியாயங்களுடன் 242 பக்கங்களைக் கொண்டு 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியான கோடுகள் கோலங்கள் புதினத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி குறித்த செய்திகளை வெளிக் கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு நெறிமுறைகள்

இவ்வாய்வுக் கட்டுரையில் சமுதாய ஆய்வு முறை, விளக்க ஆய்வு முறை ஆகிய அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

## இசுலாத்தில் கல்வி

கல்வி கற்பதும், கற்றக் கல்வியைப் பிறருக்குக் கற்றுக் கொடுப்பதும் ‘நாவு சார்ந்த இறைநம்பிக்கை என இசுலாம் குறிப்பிடுகின்றது. ‘கற்பதும், கற்பிப்பதும் இறை நம்பிக்கையே’ என்று கல்விக்கு மகுடம் சூட்டிய மார்க்கம் இசுலாமாகும். மற்ற அனைத்தையும் விட கற்பதும், கற்பிப்பதும் முதன்மையானது என இசுலாம் வலியுறுத்துகின்றது. தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ் புனிதப் பயணம் போன்ற இசுலாமிய இறை வணக்கங்களின் வரிசையில் சிறப்பிடம் பெறுவது கல்வியே எனில் மிகையல்ல. இறைவனின் இறுதித் தூதரான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து உலகைப் படைத்துப் பரிபாலிக்கும் ஏக இறைவனான அல்லாஹ் முதன்முதலாகக் கூறிய வார்த்தையே ‘ஓதுவீராக’ என்னும் கல்வி கற்பது குறித்து தான். கல்வியைக்

கற்றால் தான் இறைவனைச் சிறந்த முறையில் அறிந்து அவனுடைய தன்மைகளையும் சிறப்புகளையும் தெரிந்துகொண்டு நம்ப முடியும் என இறுதி வேதத்தில்,

"மேலும், உமக்குச் சரியாகத் தெரியாத விஷயத்தில் எவ்வாறு உம்மால் பொறுமையாய் இருக்க முடியும்...?(திருக்குர்ஆன் 18:68)"[1]

என்று ஏக இறைவன் குறிப்பிட்டுள்ளான். அறிவு ஞானம் இல்லாத ஒன்றில் நிலைத்து நிற்கவோ? சரிவர இயங்கவோ? முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளான். கல்வி இல்லாமல் இறை நம்பிக்கையும், இறை வணக்கங்களும் செயல்வடிவம் பெற முடியாது. கல்வி கற்பது, கற்பிப்பது, சிந்திப்பது, சிந்திக்கத் தூண்டுவது, ஆராய்ச்சி செய்வது, அறிவைத் தேடுவது, அறிவை மற்றவர்களுக்கு வழங்குவது ஆகிய அனைத்திற்கும் இசுலாம் அதிக முக்கியத்துவம் வழங்குகின்றது.

கல்வி என்பது மனிதனை மனிதனாக, மனிதநேயுள்ளவனாக, நேரான அறிவு வளர்ச்சிப் பெற்றவனாக மாற்ற வேண்டும். அவனுடைய ஆளுமையை வெளிக் கொண்டுவர வேண்டும். பொருளை ஈட்டுவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட கல்வியாக இருக்கக்கூடாது. நாம் கற்கும், கற்பிக்கும் கல்வி ஆன்மிகத்தையும் அறிவையும் ஒருசேர பெற்றுத் தருவதாக இருக்க வேண்டுமென இசுலாம் குறிப்பிடுகின்றது.

அபூஹுரைரா ( ரலி) அவர்கள் அறிவித்த,

"யார் கல்வியைத் தேடி ஒரு பாதையில் நடக்கிறாரோ அவருக்கு அதன்மூலம் சொர்க்கத்திற்குச் செல்லும் பாதையை அல்லாஹ் எளிதாக்குகிறான் (முஸ்லிம் – 5231)"[2]

என்ற நபிமொழியிலிருந்து கல்விக்கு இசுலாம் எவ்வளவு முன்னுரிமையை வழங்குகின்றது என்பதை அறிந்து கொள்ளலாம்.

மதரசா ஆசிரியரான குஞ்சுத்தாடியப்பா உஸ்தாதிடம் தன் மகளான சித்தி சமீராவையும், காதர் ராவுத்தர் மகளான சித்தி ஹஸீனாவையும் மேற்படிப்புப் படிக்க வைக்க ஆசைப்படுவதாக அமீர் ராவுத்தர் கூறுகிறார். அதற்கு உஸ்தாத் குஞ்சுத்தாடியப்பா,

"நீங்க நெனைச்சிருக்கிற மாதிரி நல்லா படிக்க வையுங்க. நம்ம ஊர் படிப்பு முடிஞ்சப்புறமும் டவுனுக்கு அனுப்பிப் படிக்க வையுங்க. என்ன செலவானாலும் யோசிக்காம செலவழிச்சுப் படிக்க வையுங்க! பொம்புளப் புள்ளைங்களுக்கு படிப்பு என்னத்துக்குன்னு பயலும் சிறுக்கியும் கேட்பாங்க! அதைப்பத்தியெல்லாம் கண்டுக்காதீங்க. நம்ம மார்க்கம் கல்வியைக் கண்ணாக் கருதற மார்க்கம்! நல்லா படிக்க வச்சு ரெண்டு பேரையும் உச்சானிக்குக் கொண்டு வாங்க!"[3]

என்றார்.மேலும்,

"பொம்பளப் புள்ளைங்கல படிக்க வைக்கக் கூடாதுன்னு மார்க்கந் தெரிஞ்ச ஆசாமிகளே சொல்றாங்களே உஸ்தாது! அதப்பத்தி என்ன சொல்றீங்க?

அறியாத்தனம்! மார்க்கத்த சரியாப் புரிஞ்சுக்காத மௌட்டீகம்! நம்ம மார்க்கம் ரொம்ப அறிவுப்பூர்வமானது தம்பி! ஒவ்வொரு முஸ்லிம் ஆணுக்கும் பெண்ணுக்கும் கல்வி கட்டாயம்னு ஹதீஸ் இருக்கு! ஆம்புளப் புள்ளைக்கு மட்டும் கல்வி கொடுன்னா நாயகம் சொன்னாங்க? சீனம் சென்றேனும் கல்வி பெறுன்னுதானே நாயகம் சொன்னாங்க! சீனஞ் சென்றேனும் ஆம்புளப் புள்ளைங்க மட்டும் கல்வி கத்துக்கங்கன்னா சொன்னாங்க?"[4]

என்னும் வரிகளின் மூலம் கல்விக்கு இசுலாமிய மார்க்கம் கொடுத்திருக்கின்ற முன்னுரிமையையும், கல்வி கற்பதில் ஆண், பெண் பேதம் இல்லை என்பதையும் உஸ்தாத் குஞ்சுத்தாடியப்பா கதாபாத்திரம் மூலம் பதிவு செய்துள்ளார் ஹிமானா சையத்

பெண்கல்வி இடைநிற்றல்

இசுலாமியச் சமூகத்தில் பெரும்பாலும் பெண்பிள்ளைகள் பூப்படைந்துவிட்டால் வீட்டோடு வைத்துக் கொள்வார்கள். ஒரு சில குடும்பங்களில் மட்டுமே மேற்படிப்பு படிக்க வைப்பார்கள்.

புதுக்குடி கிராமத்தில் எட்டாம் வகுப்பு வரை மட்டுமே படிக்கும் பள்ளிக்கூடம் இருந்தது. ஆண்டு ஆரம்பத்தில் எட்டாம் வகுப்பில் இருபது மாணவிகள் படித்துக் கொண்டிருந்தார்கள்.பத்து மாணவிகள் பூப்படைந்து விட்டதால் இடையில் நிறுத்திவிட்டார்கள். அமீர் ராவுத்தர் – மன்சூரா தம்பதியரின் மகளான சித்தி சமீராவும் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் போது பூப்படைந்து விட ஊரில் நல்ல செல்வாக்குடன் உள்ள அமீர் ராவுத்தருக்குத் தன்னுடைய மகள் சித்தி சமீராவை மேற்படிப்பு வரை படிக்க வைக்க

*ஆசைப்படுகிறார். ஆனால் தாய் மன்சூராவோ வயதிற்கு வந்த பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்பக்கூடாது வீட்டின் வேலைகளைக் கற்றுக்கொடுத்துத் திருமணம் முடித்து விட வேண்டும் என்ற எண்ணமுடையவள். அவளிடம் கணவர் அமீர் ராவுத்தர்,*

*"ஹெட்மாஸ்டரைப் பார்த்தேன் மன்சூரா! மெரிட் பரிட்சை தான் எழுத முடியாமப் போய்விட்டது. பரவாயில்லே புள்ளைய பள்ளிக்கு அனுப்பி வச்சிடுங்கன்னு சொன்னாரு – நாளைக்கு புதன் கிழமை பொங்கும் புதன்னு சொல்லுவாங்க – புள்ளையை பள்ளிக்கு அனுப்பி வச்சிடுவோம் என்றான்!*

*சாதாரணமாக இருந்த மன்சூராவின் முகம் சிவந்து போனது! நல்லாயிருக்கே கதை! வயசுக்கு வந்த பொண்ண எண்ணத்துக்கு பள்ளிக்கனுப்ப? ஊர் உலகம் கெட்டுப் போயிக் கெடக்கு! கண்ட காவாலிப் பயலுக தெருவுக்கு தெரு சுத்தித் திரியறானுவ – அதெல்லாம் படிச்சது போதும் – ஒரு வருஷமோ ரெண்டு வருஷமோ வீட்டுக்குள்ள இருந்து வீட்டு வேலையைக் கத்துக்கிட்டா ஒங்க தங்கச்சி மகனுக்கு கட்டி வச்சிடுவோம்! நெருப்ப வயித்துல கட்டிக்கிட்டு என்னால நடமாட முடியாது, ஆமா! என்று வெட்டிப் பேசினாள் அவள்!*

*அவளிடம் நல்லபடியாகப் பேசிப் புரிய வைக்க முடியாது என்பதை புரிந்து கொண்ட அமீர் வழக்கத்துக்கு மாறாக, கொஞ்சம் குரலை உயர்த்தினான்! என்ன நீ, எதுக்கெடுத்தாலும் எரிந்து விழுந்து, எதுத்துப் பேசிக்கிட்டே இருக்கே? பள்ளிக்கு அனுப்புறது அப்படி என்னடி பாவப்பட்ட விஷயம்? எவண்டி நம்ப புள்ளகிட்டே வாலாட்டப் போறான்? இதென்ன ஊரா காடா? இந்தப் பட்டி தொட்டியில என்னடி அப்படி நடக்காதது நடந்திடப் போகுது? அவன் அதிர்ந்தான்.*

*டீப் போட்டு பேசுற அளவுக்கு வந்துடுச்சா? நான் சொல்றேன்! என் மகள நான் நிச்சயமா பள்ளிக்கு அனுப்பப் போறதில்லே! எந்தப் பய சொன்னாலும் நான் கேட்கப் போறதில்லை"*[5]

*என மன்சூரா சண்டை போட்ட பின்பும் அமீர் ராவுத்தர் சித்தி சமீராவைப் பள்ளிக்கு அனுப்புவதில் பிடிவாதமாக இருக்கிறார். பள்ளிக்கூடத்திற்கு மகள் சித்தி சமீராவை அழைத்துக்கொண்டு கிளம்பும் நேரத்தில் மன்சூரா கிணற்றில் குதித்து விடுகிறாள். அங்கிருந்த பலரும் ஒன்று சேர்ந்து மன்சூராவைக் காப்பாற்றி விடுகிறார்கள். இதற்கு மேலும் மகளை பள்ளிக்கு அனுப்ப முயற்சித்தால் தான் விஷம் குடித்து சாகவும் தயங்க மாட்டேன் என மிரட்டி சித்தி சமீராவின் பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகிறாள் அவளது தாய் மன்சூரா*

*ஏழ்மையான நிலையிலும் கல்வி*

*அமீர் ராவுத்தர் தன்னிடம் பணியாற்றும் காதர் ராவுத்தரிடம்,*

*"சரி! சமீராவோட படிப்பை நிறுத்திட்டோம்னே வச்சுக்க! ஹஸீனாவ நீ என்னடா செய்வே? என்று கேட்டான் அமீர்! அந்தக் கேள்விக்காகவே காத்திருந்த மாதிரி நறுக்குத் தெறித்தாற் போல் உடனே பதில் சொன்னான் காதர்! நான் படிக்க வைப்பேண்ணே! நிச்சயமா படிக்க வைப்பேன்!*

*இப்ப ஊர்ல உள்ள படிப்பைக் கேக்கலைடா – எட்டாவதுக்குப் பின்னால? அவன் முடிக்கக்கூட இல்லை! எட்டாவதுக்குப் பின்னால மேல வயலுக்கு அனுப்பிப் படிக்க வைப்பேன். அதுக்குப் பின்னாடி காலேஜுக்கும் அனுப்பிப் படிக்க வைப்பேன். எம்புள்ள எவ்வளவு படிக்க ஆசைப்படுகிறதோ அதுவரைக்கும் படிக்க வைப்பேன்!"*[6]

*என்று கூறியதோடு மட்டுமில்லாமல் தன்னுடைய மகள் சித்தி ஹஸீனாவை படிக்க வைப்பதற்காக நகரத்திற்கு வந்து மூட்டைச் சுமந்தும், கிடைக்கும் வேலைகளையெல்லாம் செய்தும் மகளை மருத்துவராக்கித் தன்னுடைய இலட்சியத்தில் வெற்றி பெறும் கதாபாத்திரமாகக் காதர் ராவுத்தரைப் படைத்துள்ளார் ஹிமானா சையத்.*

*மேலும் சித்தி சமீராவிற்கு தன்னுடைய மகள்கள் முபீனா, முர்ஸிதா இருவரில் மூத்தவள் முபீனாவை டாக்டரின் உருவத்தை மாற்றி அந்த நீண்ட வெள்ளைக் கோட்டுக்குள் நிறுத்திப் பார்த்தாள். பிளாஸ்டிக் அட்டையில் டாக்டர் முபீனா எம்.பி.பி.எஸ். என்று எழுதிப் பார்த்து புல்லரித்துப் போனாள். இடையில் ஒரு பெரியவர் தன்னுடைய மகள்கள் பள்ளிக்கூடம் போகும்போது பின் தொடர்ந்து வந்து தொல்லைக் கொடுக்கும் போது,*

*"உண்மையில் சமீராவுக்கு பயம் பிடித்துக் கொண்டது! பிள்ளைகளை படிப்பிலிருந்து நிறுத்தி விடலாமா என்று கூட அந்த ஏழைத் தாய் நினைத்தாள். ஆனால் தன் இலட்சியம் – பிள்ளைகளை எப்படியாவது படிக்க வைத்து நிலைப்படுத்த வேண்டும் என்ற உறுதிப்பாடு அந்த*

*நினைவை உடனே மாற்றியது! தன் பிள்ளைகளும் தன்னைப்போல் அல்லாடக் கூடாது; தங்கள் கால்களில் நின்று அவர்கள் எதிர்காலத்தை தன்னம்பிக்கையோடு சந்திக்குமளவுக்கு உருவாக்கிவிட வேண்டுமென்ற வைராக்கியத்தில், தானே மெழுகுவர்த்தியாக எரிந்து கொண்டிருக்கிறாள்? இந்தச் சிறு தடைகளுக்கெல்லாம் பயந்துகொண்டு படிப்பை நிறுத்தி விட்டால் எப்படி? இது முட்டாள்தனமான சிந்தனை அல்லவா? என்று தனக்குத் தானே கேள்வி கேட்டு தன்னை நிலைப்படுத்திக் கொண்டாள்''*[7]

*சித்தி சமீரா என்ற வரிகளில் ஏழ்மையான நிலையிலும் தன் பிள்ளைகளைக் கல்வியின் மூலம் ஓர் உயர்ந்த இடத்தை பிடிக்க வைப்பதே தன்னுடைய கனவு என்ற இலட்சியத்துடன் வாழும் தாயாகப் படைத்தளித்துள்ளார் ஹிமானா சையத்.*

*ஹிமானா சையத் பெண் கல்விக்கும், பெண்களுக்கும் முக்கியத்துவம் தருபவர் என்பதை,*

*''பெரும்பான்மையான கதைகளை பெண்களையே முதன்மை பாத்திரங்களாக வைத்து படைத்துள்ளார் ஹிமானா சையத். 'ருசி' தொகுப்பின் மிகுதியான கதைகள் பெண்களை மையப்படுத்தியே படைக்கப்பட்டிருப்பதையும் நாம் முக்கியமாக கவனிக்க வேண்டும். 'மனைவி', 'தங்கை', 'அன்புள்ள அம்மா' எனச் சூட்டப்பட்டுள்ள கதை தலைப்புகளும், 'மனுஷி'என அமைந்த தலைப்பும் பெண்மையை முன்னிறுத்தி கதைகளை அமைத்திருப்பதற்குச் சான்றுகளாக விளங்குகின்றன''*[8]

*என்கிறார் அ.எ. நாராயணி.*

*இசுலாமிய மார்க்கக் கல்வி*

*சித்தி ஹசீனா, சித்தி சமீரா இருவரும் மதரசாவில் இசுலாமிய மார்க்கக் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்கள். திருக்குர்ஆனின் பெரிய வசனத்தைக் கூட ஒரே நாளில் மனனம் செய்து விடுவார்கள் என்பதை,*

*''யார்லா அது? ரெட்டைப் புள்ளைங்களா என்று குரல் கொடுத்தார் குஞ்சு தாடியப்பா.*

*உடனே ஒன்று சொன்னாற்போல எழுந்து நின்ற அந்த சின்னஞ்சிறிசுகள் சித்தி ஹஸீனாவும் சித்தி சமீராவும் 'அஸ்ஸலாமு அலைக்கும் உஸ்தாதப்பா' என்றார்கள்! ஒங்கூட்டுப் புள்ளைங்க தான் தம்பி! நாங்க எல்லோரும் இவங்கள ரெட்டைப் புள்ளைங் கண்டுதான் கூப்பிடுறது. அல்லாஹ் தான் கண்ணேறு நாவேறில்லாமக் காப்பாத்தனும்! பாக்குற யாரும் இதுகளை வெவ்வேறு ஊட்டுப் புள்ளங்கண்டு சொன்னா நம்ப மாட்டாங்க! முகச்சாயல், நிறம், உயரம், அறிவு, குணப்பாங்கு, பழக்கவழக்கம் எல்லாத்துலயுமே ஒத்துமை தம்பி! எம்மாம் பெரிய சூராவைக் கொடுத்தாலும் ஒரே நாள்ல மனசுல ஏத்திக்கிட்டு வந்துருதுங்க! ரெண்டு பேரையும் கிராஅத் ஓதச் சொல்லிக் கேட்டுக்கிட்டே இருக்கலாம், ஆயுசு பூரா! அவ்வளவு இனிமை! உருக்கம்! தம்பி! என்றவாறு மகிழ மரத்தடியில் போட்டிருந்த மணங்கல் திண்டில் உட்கார்ந்த குஞ்சுதாடியப்பா அமீரையும் உட்காரச் செய்தார்! இங்க வாங்க புள்ளைங்களா நேத்து சொல்லிக்கொடுத்த கிராஅத்தை அத்தாகிட்ட ஓதிக் காட்டுங்க பார்ப்போம்! என்று சொன்னார்.*

*இரண்டு பிள்ளைகளும் அடக்கமாக அவர்கள் முன் வந்து நின்றார்கள். முக்காட்டை இழுத்துப் போட்டுக் கொண்டார்கள். பக்தி உணர்வோடு கைகளைக் கட்டிக் கொண்டார்கள். அவூது பில்லாஹி மினஷ்ஷைத்தானிர்ரஜீம் - வலனப்னு வன்னக்கும் பிஷைஇன்..... என்று உருக்கமாக ஓத ஆரம்பித்தார்கள். ஒரு அட்சரம் பிழையின்றி உரிய நிறுத்தல், நீட்டல்களோடு – ஏற்ற இரக்கத்தோடு அந்தப் பிஞ்சுகளின் இனிய குரலில் வழிந்து வந்த அந்த இறை மொழியில் நெகிழ்ந்து அங்கு ஒரு கூட்டமே கூடிவிட்டது!*

*சபாஷ்! ரொம்ப நல்லா பாடம் பண்ணியிருக்கீங்க! போங்க! மதரஸாவுக்கு நேரமாச்சு! என்று முதுகில் தட்டி அவர்களை அனுப்பிவிட்டு எழுந்தார் உஸ்தாத்.''*[9]

*என்று குறிப்பிட்டுள்ளார் ஹிமானா சையத். அரபு மொழியில் அமைந்துள்ள இறைவனின் இறுதி வேதமாகிய திருக்குர்ஆனை ஓதக் கற்றுக் கொள்வது ஒவ்வொரு முஸ்லிமான ஆண் மற்றும் பெண்களின் அடிப்படைப் பண்பாகும். அதற்காக சிறு வயது முதலே முஸ்லிம்கள் அரபுப் பாடசாலையான மதரசாவிற்குப் பிள்ளைகளை அனுப்பிப் படிக்க வைக்கின்றனர். சித்தி ஹசீனாவும், சித்தி சமீராவும் அத்தகைய பண்பைப் பெற்றவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார் ஹிமானா சையத்.*

உதவும் உள்ளம்

காதர் ராவுத்தர் – நபீஸா என்ற ஏழைத் தம்பதியரின் மகளாகப் பிறந்து, பெற்றோரின் கடின உழைப்பாலும் முயற்சியாலும் மருத்துவராக வாழ்க்கையில் உயர்ந்தவள் சித்தி ஹஸீனா. சித்தி ஹஸீனாவின் கணவன் பேராசிரியர் ரபீக் கல்லூரிப் பணியோடு சமூகச் சேவையையும் செய்பவன். முஜிப் மற்றும் முனீர் என இரு மகன்களோடு ஒரு மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்பவள். மருத்துவர் சித்தி ஹஸீனாவின் கணவனான பேராசிரியர் ரபீக் சமூக சேவை செய்வதை வாடிக்கையாகக் கொண்டவன். மேலும், கல்லூரியில் கட்டணம் செலுத்த முடியாத ஏழை மாணவர்களுக்கு ஆபத்பாந்தவான் பேராசிரியர் ரபீக் என்பதை,

*“வீட்டை விட்டு கிளம்பும் போதே மணிபர்சில் குறைந்தது ஆயிரம் ரூபாயாவது இருக்கும்படி பார்த்துக் கொள்வான்! ஏழை மாணவர்கள் எந்த நேரமும் உதவி நாடுவார்கள் – கொடுப்பான் – பெரும்பாலும் திரும்பிக் கொடுத்து விடுவார்கள். சிலர் கொடுக்கவும் மாட்டார்கள் – அவனும் கண்டு கொள்வதில்லை!”*[10]

என்னும் வரிகளின் மூலம் அறிந்து கொள்ளலாம். பிறருக்கு உதவி செய்யும் போது ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாவதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் இறைப் பொருத்தத்திற்காகச் சமூகசேவை செய்பவராகவும், கல்லூரியில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு பொருளாதார உதவி செய்பவராகவும் பேராசிரியர் ரபீக்கைப் படைத்துக் காட்டியுள்ளார் ஹிமானா சையத். பேராசிரியர் ரபீக்கின் மனைவியான மருத்துவர் சித்தி ஹஸீனாவும் கணவன் பொதுச் சேவை செய்வதை ஊக்கப்படுத்துபவளாக அமைந்து விடுகிறாள்.

கருப்பாயி பாட்டியின் தோற்றத்தை வைத்து அவளது பொருளாதாரப் பின்னணியைக் கணிக்க முடியாத அளவிற்கு வசந்த் நகரில் எருமை மாடுகளை வைத்து பால் வியாபாரம் செய்து கொண்டு நான்கு சிறு வீடுகளை வாங்கி வாடகைக்கு விட்டு வாழ்ந்து வருபவள். சித்தி சமீரா மற்றும் ஜப்பார் தம்பதியினர் குடியிருக்கும் வீட்டின் உரிமையாளர். சித்தி சமீராவின் மகள்களான முபீனா மற்றும் முர்ஸிதாவின் மீது அன்பும் அக்கறையும் கொண்டவள் கருப்பாயி பாட்டி. கருப்பாயி பாட்டிக்கு குழந்தைகள் இல்லை தான் ஆனால் விரிந்த இந்த உலகத்தையே தன் குடும்பமாக்கிக் கொண்டவள். கருப்பாயி பாட்டியை மாடு முட்டி வயிற்றைக் கிழித்து உயிருக்குப் போராடும் நேரத்தில் சித்தி சமிரா பாட்டியைக் காப்பாற்றி மருத்துவமனையில் இருக்கும்போது தன்னுடைய சொத்துக்களைச் சித்தி சமீராவின் பிள்ளைகளுக்கு உயில் எழுதி வைக்க முடிவு செய்து தன்னுடைய உறவினரான சேதுக்கோனார் முன்னிலையில் கூறுகிறாள். வழக்கறிஞர் அந்த மருத்துவமனையின் மருத்துவரான சித்தி ஹஸீனாவிடம் ஒரு சாட்சி கையெழுத்து போடக் கூறும்போது இப்பொழுது என்ன அவசரம் என கேட்க,

*“இல்ல டாக்டர்; பாட்டிக்கு குழந்தைங்க இல்லே – நெருக்கமான உறவுக்காரங்களும் இல்லே! ஓரளவு சொத்துக்கள் இருக்கு – இந்த சேதுக்கோனார் தான் சொல்லிக்கொள்றாப்ள தூரத்து உறவு. பாட்டியோட மனசு ரொம்ப விசாலம். அவங்களோட சொத்துக்களையெல்லாம் ரெண்டு மைனர் கேர்ள்ஸ் பேர்ல எழுதி வைக்கிறாங்க – அந்தப் பொண்ணுங்கள நல்லா படிக்க வைக்கணும். ஒருத்தியையாவது டாக்டராக்கனும் – அவ, அவங்களோட வசந்த் நகர்ல ஆஸ்பத்திரி வச்சு ஏழைகளுக்கு உதவி செய்யனுங்கிறதெல்லாம் பாட்டியோட ஆசை!”*[11]

என வழக்கறிஞர் விளக்கினார் என்னும் வரிகளில் எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்த வேறொரு மதத்தைச் சேர்ந்த படிப்பறிவில்லாதப் பாமரப் பெண்ணானக் கருப்பாயி பாட்டி தன்னுடைய சொத்தையெல்லாம் சித்தி சமீராவின் மகள்களான முபீனா மற்றும் முர்ஸிதாவிற்கு கொடுக்க உயில் எழுதி வைத்து பெண்கள் கல்வி கற்பதற்கு உதவும் கருப்பாயி பாட்டியின் வெள்ளை உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் ஹிமானா சையத்.

முடிவுரை

இசுலாம் மார்க்கம் கல்விக்கு கொடுத்திருக்கும் முக்கியத்துவத்தையும், கல்வி கற்பதில் ஆண், பெண் பேதம் பார்க்க கூடாது என்று கூறி இருப்பதையும் ஹிமானா சையத் தன்னுடைய கோடுகள் கோலங்கள் புதினத்தின் கதை மாந்தர்கள் வாயிலாக நிறுவியுள்ளார். இசுலாமியச் சமூகத்தில் பெண்கள் பருவம் அடைந்ததும் கல்வி இடைநிற்றல் நிகழ்வதைப் பதிவு செய்துள்ளார். கல்விச்செல்வம் ஒருவருக்கு கிடைத்து விட்டால் வாழ்க்கையில் நல்ல நிலைக்கு உயரலாம் என்பதை மருத்துவர் சித்தி ஹஸீனா வாயிலாகப் புலப்படுத்தியுள்ளார். உலகக் கல்வி, மார்க்கக்கல்வி இரண்டையும் கற்பது இசுலாமியர்களின் அடிப்படை என்பதை நிறுவியுள்ளார்.

ஏழ்மையான நிலையில் உள்ளவர்களுக்குக் கல்விச்செல்வம் கிடைப்பதற்கு உறுதுணையாகப் பேராசிரியர் ரபீக், கருப்பாயி பாட்டி போன்ற நல்ல உள்ளம் கொண்டவர்கள் உதவுவார்கள் என்பதையும் கோடுகள் கோலங்கள் புதினத்தில் பதிவு செய்துள்ளார் ஹிமானா சையத்.

அடிக்குறிப்புகள்

1. மௌலவி ஏ. குத்புதீன் அஹமத் பாகவி, திருக்குர்ஆன், ப.570, இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட், சென்னை -12, 19ஆம் பதிப்பு,டிசம்பர் 2016.
2. மௌலவி சா.அப்துந் நாஸிர் ஃபாஜில் பாகவி, ஸஹீஸ் முஸ்லிம், பாகம் நான்கு, ப.783.ஹதீஸ் முஸ்லிம்,பாகம் நான்கு, ரஹ்மத் பதிப்பகம்,சென்னை,திருத்திய பதிப்பு – ஜனவரி 2017
3. ஹிமானா சையத், கோடுகள் கோலங்கள், பக்.147-148, மல்லாரி பதிப்பகம், சித்தார் கோட்டை -623 513, இராமநாதபுரம் மாவட்டம், முதல் பதிப்பு, ஏப்ரல் 1996.
4. மேலது., ப.148.
5. மேலது, பக்.181-182.
6. மேலது, ப.178.
7. மேலது, பக்.118-119.
8. அ.எ. நாராயணி, ஹிமானா சையத்தின் ருசி சிறுகதைத் தொகுப்பு – ஓர் ஆய்வு,(எம்.ஃபில். ஆய்வேடு), ப.52, சென்னை பல்கலைக்கழகம், சென்னை, அக்டோபர் 1995.
9. ஹிமானா சையத், கோடுகள் கோலங்கள், பக்.146-147, மல்லாரி பதிப்பகம், சித்தார் கோட்டை -623 513, இராமநாதபுரம் மாவட்டம், முதல் பதிப்பு, ஏப்ரல் 1996.
10. மேலது, ப.30
11. மேலது. , பக்.227-228.

********* ********* ********** ********* ********* ********** ********** **********